**கல்வி அமைச்சின் பாலர் பள்ளி (பிளாங்கா ரைஸ்)**

**நடவடிக்கையின் தலைப்பு: அதிசய வாரத் திட்டப்பணி - ‘பொங்கல் பானை’**

1. **நடவடிக்கையின் பின்னணி:**

அதிசய வாரம் என்பது மாணவர்கள் விருப்பத்துடனும், ஆர்வத்துடனும் தாமே தேர்ந்தெடுத்த ஒரு தலைப்பையொட்டி ஆழமாக அறிந்துகொள்ளும் ஒரு திட்டப்பணியாகும். இத்திட்டப்பணி பாலர் வகுப்பு இரண்டாம் ஆண்டு பிள்ளைகளுக்காக நடத்தப்பட்டது. இது முதல் தவணையின் கடைசி இரண்டு வாரங்களில் (26/2/2018 முதல் 9/3/2018) நடத்தப்பட்டது.

2. **நோக்கங்கள்:**

- பிள்ளைகள் பொங்கல் பானை வனைதல்பற்றி அறிந்துகொள்வார்கள்.
- பிள்ளைகள் பொங்கல் பானையை அலங்கரிப்பதுபற்றித் தெரிந்துகொள்வார்கள்.
- பிள்ளைகள் பொங்கல் பொங்கி வருவதைப்பற்றிக் கற்றுக்கொள்வார்கள்.

3. **நடவடிக்கையின் படிநிலைகள்:**

அதிசய வாரத் திட்டப்பணி மூன்று படிநிலைகளைக் கொண்டது.

**முதல் படிநிலை: நான் தெரிந்துகொள்ள விரும்புவது...**

பிள்ளைகள் ‘பொங்கல் பானை’ என்னும் தலைப்பைத் தேர்ந்தெடுத்தார்கள். பொங்கலைப்பற்றித் தங்களுக்குத் தெரிந்தவற்றை ஆசிரியருடன் கலந்துரையாடினார்கள்.



பிள்ளைகள் தங்களுக்குப் பிடித்த புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.



பிள்ளைகள் பொங்கல் பானையை அலங்கரிப்பதுபற்றித் தன்னம்பிக்கையுடன் பேசுகிறார்கள்.

## கல்வி அமைச்சின் பாலர் பள்ளி (பிளாங்கா ரைஸ்)



பிள்ளைகள் கடையில் வாங்கிய பொங்கல் பானையைப் பார்க்கிறார்கள்.

## இரண்டாம் படிநிலை: நான் கண்டுபிடித்தவை...

பிள்ளைகளின் வினாக்களுக்கு விடைகளைக் கண்டறிய, ஆசிரியர் அவர்களுடன் கலந்துரையாடித் தொடர்ந்து என்ன செய்வதென்று திட்டமிட்டார். பிள்ளைகள் பானை வனையும் முறையையும், பானையை அலங்கரிக்கும் முறையையும் இணையத்தில் தேடிக் கண்டுபிடித்தார்கள். ஆசிரியர் பிள்ளைகளுக்கு வெள்ளைக் களிமண்ணைக் கொடுத்துப் பானை செய்யவும், வண்ணச்சாயங்களைப் பயன்படுத்திப் பானையை அலங்கரிக்கவும் வாய்ப்பளித்தார்.



பிள்ளைகள் வெள்ளைக் களிமண்ணால் பொங்கல் பானையும் பானைமூடியும் செய்கிறார்கள்.





பிள்ளைகள் பொங்கல் பானையை அலங்கரிக்கிறார்கள்.

MOE KINDERGARTEN @BLANGAH RISE

# கல்வி அமைச்சின் பாலர் பள்ளி (பிளாங்கா ரைஸ்)



பிள்ளைகள், தாங்கள் செய்த பொங்கல் பானையைத் தங்களது நண்பர்களிடம் காண்பிக்கிறார்கள்.



பொங்கல் விழா ஏன் கொண்டாடப்படுகிறது என்பதைப்பற்றி ஆசிரியர் விளக்குகிறார்.



பிள்ளைகள் பொங்கலுக்குத் தேவையான அரிசியையும், பருப்பையும் தொட்டுப் பார்க்கிறார்கள்.



பிள்ளைகள் ஏலக்காயை நுகர்ந்து பார்க்கிறார்கள்.



சுவைக்காகத் தேங்காய்ப்பூ சேர்ப்பதைப்பற்றிப் பிள்ளைகள் தெரிந்துகொள்கிறார்கள்.



பொங்கலில் நெய் சேர்ப்பதைப் பிள்ளைகள் ஆர்வத்துடன் பார்க்கிறார்கள்.

## கல்வி அமைச்சின் பாலர் பள்ளி (பிளாங்கா ரைஸ்)



சுவையான பொங்கல் தயார்!



வாழை இலையில் பரிமாறப்பட்ட பொங்கலைச் சுவைக்கப் பிள்ளைகள் ஆவலோடு இருக்கிறார்கள்.

### மூன்றாம் படிநிலை: நான் தெரிந்துகொண்டவை...

பிள்ளைகள் தாங்கள் பொங்கல் பானையை முப்பரிமாணத்தில் (3D) வடிவமைத்ததையும், அலங்கரித்ததையும், பொங்கல் செய்யும் முறையையும் படங்களாக வரைந்தார்கள். அவர்கள் தாங்கள் கண்டறிந்தவற்றைச் சக பிள்ளைகளுடன் வகுப்பில் பகிர்ந்துகொண்டார்கள். மேலும், அவர்கள் தங்கள் பெற்றோரிடமும் இதுபற்றி மகிழ்ச்சியுடன் கலந்துரையாடினார்கள்.



பிள்ளைகள் பொங்கலைத் சுவைத்து மகிழ்கிறார்கள்.



பிள்ளைகள் ‘பொங்கல் பானை’ என்னும் பாடலை இசையுடனும் அசைவுகளுடனும் பாடி மகிழ்கிறார்கள்.



பிள்ளைகளின் கைவண்ணத்தில் உருவான அழகிய பொங்கல் பானைகள்!

# கல்வி அமைச்சின் பாலர் பள்ளி (பிளாங்கா ரைஸ்)



பிள்ளைகள் தாங்கள் பொங்கல் பானை செய்த அனுபவத்தைப்பற்றிப் பேசுகிறார்கள்.



பிள்ளைகள் தாங்கள் உருவாக்கிய பொங்கல் பானையைப் பார்த்து மகிழ்கிறார்கள்.

## 4. நடவடிக்கையின் நிறைவு:

இளம் மாணவர்களைப் பேணி வளர்த்தல் தாய்மொழிகளுக்கான பணிச்சட்டத்தின் அடிப்படையில் பிள்ளைகள் ‘பொங்கல் பானை’ என்னும் தலைப்பைத் தேர்ந்தெடுத்தபோதும், அதைப்பற்றித் தெரிந்துகொண்டபோதும், பானையைச் செய்து அலங்கரிக்கும்போதும் பிள்ளைகளுக்கிடையே கருத்துப்பரிமாற்றம் நடந்தது. பிள்ளைகள் தங்கள் கருத்துக்களை மற்ற பிள்ளைகளுடன் பகிர்ந்துகொண்டார்கள். இந்நடவடிக்கைகளின்மூலம் பிள்ளைகள் பொங்கல் விழாவைப்பற்றி நன்கு தெரிந்துகொண்டார்கள். பிள்ளைகள் தங்கள் நண்பர்களிடமும் பள்ளிக்கு வந்திருந்த பெற்றோர்களிடமும் பொங்கல் விழாவைப்பபற்றி உற்சாகத்துடனும், ஆர்வத்துடனும் கலந்துரையாடினர்கள்.

**Contributed by:**
Mrs Reka Sherlin John (Senior Teacher cum TL Teacher)
Ms Rachael Lui Wai Kwan (Centre Head)
Ms Ani Mulyani (OSO)
Mrs Sree Devi Chutkay Siddharth (PSG Member)